**வேதத்தை வாசித்து புரிந்து கொள்ள வேண்டும்**
Thursday Bible Study
ACA Avadi Church
07 March 2024

**சங்கீதம் 119:18**
உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.

- வேதாகமத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.
- நம்முடைய விசுவாச பயணத்தில் நாம் குருடர்களாகவும், செவிடராகவும், ஊமையாகவும் அல்லது எல்லா உணர்வுகளையும் இழந்தவர்களாகவும் நாம் மாறுவதை நம்முடைய தேவன் விரும்பவில்லை.
- நாம் பாடினாலும், ஜெபித்தாலும், படித்தாலும் அல்லது பின்பற்றினாலும் - அதை நாம் புரிந்துகொண்டு செய்ய வேண்டும் என்று நம்முடைய தேவன் விரும்புகிறார்.

**I கொரிந்தியர் 14:15**
15. இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.

**வேதத்தை வாசித்து புரிந்து கொள்ள வேண்டும்:**
**நெகேமியா 8:2-3**
2. அப்படியே ஏழாம் மாதம் முதல்தேதியில் ஆசாரியனாகிய எஸ்றா நியாயப்பிரமாணத்தைப் புருஷரும் ஸ்திரீகளும், கேட்டு அறியத்தக்க அனைவருமாகிய சபைக்கு முன்பாகக் கொண்டுவந்து,
3. தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதிக்கு எதிரேயிருந்து காலமேதொடங்கி மத்தியானமட்டும் புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும், **கேட்டு அறியத்தக்க மற்றவர்களுக்கும் முன்பாக அதை வாசித்தான்; சகல ஜனங்களும் நியாயப்பிரமாண புஸ்தகத்திற்குக் கவனமாய்ச் செவிகொடுத்தார்கள்.**

**எபேசியர் 3:3-5**
3. அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்.
4. இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்.
5. அதை நீங்கள் **வாசிக்கையில்** கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்;

- **வேதத்தை சரியாக வாசிக்காததினால் சதுசேயர் வேதத்தையும் தேவனுடைய வல்லமையும் தவறாக புரிந்து கொண்டனர்.**

**மத்தேயு 22:23–31**
23. உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற சதுசேயர் அன்றையதினம் அவரிடத்தில் வந்து:
24. போதகரே, ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்கவேண்டும் என்று மோசே சொன்னாரே.
25. எங்களுக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்தார்கள்; மூத்தவன் விவாகம்பண்ணி, மரித்து, சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு

விட்டுவிட்டுப்போனான். 26. அப்படியே இரண்டாம் மூன்றாம் சகோதரன்முதல் ஏழாம் சகோதரன்வரைக்கும் செய்தார்கள். 27. எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். 28. ஆகையால், உயிர்த்தெழுதலில், அவ்வேழுபேரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்கள் எல்லாரும் அவளை விவாகம்பண்

ணியிருந்தார்களே என்று கேட்டார்கள். 29. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். 30. உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்; 31. மேலும் மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் **உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா**?

- **பரிசேயர்கள் வேதத்தை சரியாக வாசிக்காததினால், சீஷர்களிடத்தில் குற்றம் கண்டுபிடித்தனர்.**

**மத்தேயு 12 : 1 – 5**

1.அக்காலத்திலே, இயேசு ஓய்வுநாளில் பயிர்வழியே போனார்; அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து, தின்னத் தொடங்கினார்கள். 2. பரிசேயர் அதைக் கண்டு, அவரை நோக்கி: இதோ ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே என்றார்கள். 3. அதற்கு அவர்: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது செய்ததை **நீங்கள் வாசிக்கவில்லையா?**

4. அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைத் தானும் தன்னோடிருந்தவர்களும் புசித்தார்களே. 5. அன்றியும், ஓய்வுநாட்களில் ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஓய்ந்திராமல், ஓய்வுநாளை வேலை நாளாக்கினாலும் குற்றமில்லாதிருக்கிறார்கள் என்று **நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா?**

- **பரிசேயர்கள் வேதத்தை சரியாக வாசிக்காததினால் இயேசுவையே சோதிக்க முயற்சித்தனர்.**

**மத்தேயு 19 : 3 – 5**

3. அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள். 4. அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், 5. இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், **நீங்கள் வாசிக்கவில்லையா?**

**I தீமோத்தேயு 4: 13**

**நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு.**

**வேதத்தை வாசிக்க கவனத்தை செலுத்தும்படி தீமோத்தேயுவை கேட்டுக்கொள்ளும் சூழல்:**

**1. விசுவாசிகள் மத்தியில் தன்னுடைய நிலைப்பாட்டை உயர்த்துவதற்கான சூழலில் (பின்னணியில்) எழுதப்பட்டது.**

**I தீமோத்தேயு 4: 6,15,12.**

6. இவைகளை நீ சகோதரருக்குப் போதித்துவந்தால், விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும் நீ அநுசரித்த நற்போதகத்திலும் தேறினவனாகி, இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்.

15. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு.

12. உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.

**2. சில பழக்கவழக்கங்களைத் தவிர்ப்பதற்கான சூழலில் (பின்னணியில்) எழுதப்பட்டது.**

**I தீமோத்தேயு 4:7**

சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவபக்திக்கேதுவாக முயற்சிபண்ணு.

**3. தன்னுடைய தாக்கத்தை (செல்வாக்கை) விரிவுபடுத்தும் படியான சூழலில் (பின்னணியில்) எழுதப்பட்டது (வாசித்தல் > புத்தி சொல்லுதல் > உபதேசித்தல்)**

**I தீமோத்தேயு 4:13**

13. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு.

**4. நீ தேறினவனாய் (சிறந்தவனாய்) இருக்கும்படியான சூழலில் (பின்னணியில்) எழுதப்பட்டது.**

**I தீமோத்தேயு 4: 16**

16. உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்.

**1. வேதத்தை ஒரு அஸ்திபாரத்தோடு வாசிக்க வேண்டும்:**

**யூதா 1: 10**

10. இவர்கள் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள்; புத்தியில்லாத மிருகங்களைப்போல சுபாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

**2. வேதத்தை நம்முடைய உருவாகுதலுக்காக வாசிக்க வேண்டும்:**

- நமக்கு ஏற்கனவே எல்லாம் தெரிந்தது போல் வேதத்தை வாசிப்போமானால், நாம் தேறினவர்களாக உருவாகும் வாய்ப்புகளை நாம் தவறவிடலாம்.

- சில சமயங்களில் நாம் வேதத்தை வாசிக்கும்போது, அதிலிருந்து ஏதாவது ஒன்று கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வாசிக்கிறோம் - உதாரணமாக நம்மை கவர்ந்திழுக்கக் கூடிய ஒரு வரி வாசகங்கள் அல்லது நமக்கு இருக்கும் கேள்விக்கான விடைகளை தேடி வாசிக்கிறோம்
- இவை நமக்கு ஏற்கனவே பரீட்சயமான பகுதிகளை வாசிக்காமல் தவிர்த்து விட்டு அல்லது ஒரு குறிப்பிட்ட வசனம் இதைத்தான் சொல்லுகிறது என்கிற முடிவுக்கு நேரடியாக நம்மை வழிநடத்த கூடும்.
- வேதத்தை நாம் நிறுத்தி பொறுமையாக வாசிப்பதினிமித்தம் தேவன் நாம் எதிர்பாராத விதத்தில் புதியதொரு வழிகளில் நம்மிடம் பேசுவதற்கு உதவி செய்கிறது.
- வேதத்தை நாம் நிறுத்தி பொறுமையாக படிக்கும்போது நாம் எதை கேட்க வேண்டுமோ அதை கேட்பதற்கான ஒரு இடைவெளியை ( இடத்தை) உருவாக்க முடியும் இல்லையெனில் நாம் வேகமாக வாசித்து கடந்து சென்று விடுவோம்

**படி 1: இடைநிறுத்தங்களுடன் மெதுவாக வாசிக்க வேண்டும் .**
**படி 2: தேவனுடைய மெல்லிய சத்தத்தை கேட்பதற்கு ஆழமாக தியானிக்க முயற்சி செய்ய வேண்டும்**
**படி 3: தேவனுடைய நடத்துதலுக்கு நம்மை ஒப்புக்கொடுத்தல்.**
**படி 4: தேவன் நம்மில் கிரியை செய்வதற்கு நாம் அமைதியாக இருக்க வேண்டும்.**

**3. தேவனிடத்தில் பழகுவதற்கு வேதத்தை வாசிக்க வேண்டும்.**

**ஓசியா 8 : 14**

14. இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்; யூதா அரணான பட்டணங்களைப் பெருகப்பண்ணுகிறான்; ஆனாலும் நான் அதின் நகரங்களில் அக்கினியை வரப்பண்ணுவேன்; அது அவைகளின் கோவில்களைப் பட்சிக்கும்.

**ஓசியா 8:12**

12. என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்.